# ராமர் கட்டிய சேது

அன்பர்களே!

நாம் இப்போது பங்குனி உத்திர மண்டபத்திற்கு வந்துவிட்டோம்.அதோ பாருங்கள் எவ்வளவு ஒய்யாரமாய்,கம்பீரமாய்,கருணைக் கடலாம் தாயாரும் பரப்ரம்ம சாகரமாம் நம்பெருமாளும் சேர்ந்து அமர்ந்து சேவை தருகிறார்கள்.அதோ உத்திர மண்டபத் தூண்களில் ராமாயண நபர்கள் பணிவுடன் திவ்யத்தம்பதியினரைச் சுற்றி வணங்கிய வாக்கில் நிற்கின்றனர்.ராமனும் சீதையும் இலங்கையில் இருந்து அயோத்தியா மீண்டு வந்து பட்டாபிஷேகம் காணும் மகோத்சவம் ஞாபகப் படுத்தப்படுகிறது.

இன்று இந்திய அரசியலையும்,மக்களின் பாரம்பரிய நம்பிக்கையையும் அசைக்க முயற்சிக்கும் ராமனின் சேது பற்றி சிறிது பார்ப்போம்.
இலக்கியங்கள் பழங்காலத்தில் உண்மையை அடிப்படையாகக் கொண்டு,மக்களுக்கு வாழ்க்கைத் தத்வங்களை எடுத்துக் கூறும் படியாக புலவர்களும்,ஆச்சாரியர்களும் கையாண்டுள்ளனர்.

நடந்ததை அப்படியே எழுதினால் அதன் பெயர் வரலாறு.உண்மையுடன் அழகும் கற்பனையும் கலந்து எழுதினால் அதுவே இலக்கியம்.இலக்கியங்களே அக்கால பொழுது போக்கு சாதனங்கள்.மக்களுக்கும்,குழந்தைகளுக்கும் அலுப்பு தட்டாமல் இருக்கும்படி அவை பலபட புனையப்பட்டன.

மனிதர்கள் இயற்கையுடன் உலாவினர்,அனைத்து உயிர்களுடனும் பேசினர்,பழகினர்.சோர்வு ஏற்படாமல் இருக்க மாயவித்தைகளும் கிளைக்கதைகளும் உண்டாயின.

ஒன்றை நாம் தெரிந்து கொள்ள வேண்டும்.எல்லாவற்றிற்கும் அறிவியல் ஆதாரம் தேட முடியாது.அதே போல் எதுவுமே உலகில் புதியது என்பது இல்லை.ஏற்கனவே உள்ளதின் மாற்றமே புதிய கண்டுபிடிப்புகள்.இன்று நாம் கணிப்பொறியைப் பயன்படுத்தியதை ஆயிரம் ஆண்டுகளுக்குப்பின் மக்கள் நம்பமாட்டார்கள்.

அதே போல் எக்காலத்தும் எந்த நாட்டிலும் மக்கள் இல்லாத ஒன்றை ஏற்கவே மாட்டார்கள்,குறிப்பாக மதவழிபாட்டில் புகுத்திக் கொள்ளமாட்டார்கள்.

மேலும் அன்றும் இன்றும் என்றும் சிறந்த நலவாழ்க்கை வாழ்ந்தவர்களை வழிபடும் ‘‘ஹீரோ வர்ஷிப்’’ அழியவே அழியாது.அரசனை தெய்வமாக மதிக்கும் கலாச்சாரம் உலகம் எங்கும் இருந்த ஒன்றே.

ராமன் என்ற மாமனிதனின் ஒழுக்கம்,அரசதர்மம்,மக்களின் பரிபாலனம் ஆகியவை அவனை கடவுள் ஆக்கியது.நம் மனத்தில் உள்ள பல தெய்கங்கள் மனித அவதாரங்களே.கண்ணகி மாரியம்மன் ஆனாள்,பாஞ்சாலி அம்மன் ஆனாள்,ஏன் ராஜஸ்தானில் பல சதி ஸ்ரிகள் சதைமாதாக்கள் ஆயினர்.நல்லதங்காள்,பழையனூர் நீலி,ஆழ்வார்கள்,நாயன்மார்கள் என மனிதாவதாரங்கள் எத்தனை எத்தனை?ராமனும் கண்ணனும் அப்படியே!

என் பேராசியர் திரு.தட்சினாமூர்த்தி கூறுவார்,‘‘கண்ணகி மதுரையைத் தான் எரித்திருக்க வேண்டும் என்பதில்லை.அவள் வாழ்க்கை எங்கோ க்ராமத்தில் கூட நிகழ்ந்திருக்கலாம்’’ என்பார்.

**இனி ராமனின் சேதுவைக் காண்போம்.**

*பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் நடந்த வரலாறு ராமாயணம்.
*இரண்டு ஆண்டுகளுக்கு முன் நான் பார்த்த திருப்பூர் இன்று மாநகர வரிசையில் வந்துள்ளது.

*இன் தாத்தா பார்த்த மெரினா பீச் இன்று சாலையை விட்டு வெகு தூரம் போய் விட்டது.
*ராமன் காலத்து வங்கக்கடல் எப்படி இருந்திருக்கும்?
*பயங்கரமான ஆழம் மிக்கது அக்கடல் என்கிறார் வால்மீகி.இது இலக்கிய நயம்.ஆழ் கடலினைக் கடந்து செல்வது அன்று ஒரு மாபெரும் சாதனை அல்லவா?
*ஆழமற்ற கடலில் ஒருமாத காலத்தில் பல கப்பல்கள் பல ஆயிர வீரர்களுடன் செல்வது கடினம்.
*எனவே மணல் திட்டுக்களை,கற்களாலும்,பாறைகளாலும் ,வலியபெரியமரங்களாலும் இணைக்கிறார்கள் வீரர்கள்.
*பல ஆயிரம் யோஜனை தூரம் சேது இருந்தது என்று வால்மீகி கூறுகிறார்.இதுவும் இலக்கிய நயமே எனலாம்.
*மேலும் வால்மீகி கூறிய தமிழகத்தின் அன்றைய கபாடபுரம் இன்று இல்லை.காலத்தின் சூழலில் பல நிலவியல் பூகோள மாற்றங்கள் ஆகிவிட்டன.
*மணிமேகலை இலக்கியம் கன்யாகுமரியில் இருந்தே சேது ஆரம்பம் ஆகின்றது என்ற ஒரு குறிப்பைத் தருகிறது.
*இன்று எப்படி மக்கள் பல இயற்கைக்கு அப்பாற்பட்ட விஷயங்களை ஏற்பதில் யோசிக்கின்றனரோ ,அதே போல் தான் அன்றும் யோசித்து இருப்பர்.வால்மீகி வெறுமனே கதைகட்டி எழுத இயலாது.

சேது பாலம் எந்த இடத்தில் எளிமையாகக் காண்பதற்கு இருக்கிறது?
ராமநாதபுரம் ஊரில் இருந்து கிழக்கே திருப்புல்லாணி என்ற கிராமம் உள்ளது.அது ஒரு வைஷ்ணவ திவ்ய தேசம்.ஆழ்வார்களால் பாடப்பட்ட இடம்.அங்கே மிகப்பெரிய பெருமாள் கோயில் உண்டு.

அக்கோயிலில் தனியே ராமன் கடல்தர்ப்பைப்புற்கள் மீது படுத்த கோல சிலாவடிவம் தனி மூலஸ்தானத்தில் உள்ளது.

காரணம்:ராமன் கடலினைக் கடக்க வேண்டி ,பஞ்சபூதங்களுள் ஒன்றான வருநதேவதையிடன் யோகமுறையில்,கடல்தர்ப்பைப் புற்கள் மீது படுக்கிறார்.வலது கையைத் தலைக்குக் கீழ் வைத்து ஏழுநாட்கள் யோகத்தில் ஆழ்கிறார்.இவ்விடமே திருப்புல்லாணி ஆகும்.

கடல் புல்கட்டையே தலையணையாக வைத்துக் கிடந்த இடமே ''புல் அணை'' என்றானது.

சரி,இனி திருப்புல்லாணிக் கோயிலில் இருந்து ஒன்றரைக் கி.மீ சென்றால் அழகான வங்கக்கடல் வரும்.அது அலைகள் இன்றி அமைதியாக உள்ளது.கரையில் பெரிய அனுமன் கோயில் உள்ளது.

சீதையையும் ராமனையும் அனுமனே சேர்த்து வைத்தான்.ஜீவாத்மாவைப் பரமாத்மாவுடன் இணைப்பது தான் குருவின் கடமை.எனவே ஞானகுருவான அனுமன் இரு ஆத்மாக்களை இணைத்த சேதுவைப்பார்த்த படியே வலது கையால் அபயம் காட்டி நிற்கிறான்.

கடற்கரையில் கடல்தர்ப்பைப் புற்கள் ஒதுங்கிக் கிடப்பதையும் காணலாம்.

பின்னர்,உரிய அனுமதியுடன் மீனவ நண்பர்களிடம் அனுகினால்,அவர்கள் கடலுக்குள் சுமார் இரண்டு கி,மீ தூரம் அழைத்துச் சென்று படகை நிறுத்துவர்.உங்களுக்குக் கீழ் கடலில் தேசிய நெடிம் சாலைக் கணக்கில் சேது ப்ரம்மாண்டமாய் இலங்கை நோக்கிச் செவ்வதைக் காணலாம்.
அவ்விடத்திருந்து இலங்கை இருபத்திநான்கு கி.மீ என்கிறார்கள்.

சேது இலங்கையில் முடியும் இடத்தே சிறிய ராமர் கோயில் உள்ளதாகக் கூறுகிறார்கள்.

கடலில் நீச்சல் தெரிபவர்கள் சேதுவின் மீது இறங்கி நடக்கலாம்.என் தம்பி நடந்தான்.பாலத்தின் கற்கள் சிலவற்றை பூசைக்காக எடுத்தான்.

மேலும் அமெரிக்க நாசா ஆய்வுக் கழகம் வெளியிட்டுள்ள செயற்கைக்கோள் படங்கள் சேதுவை உறுதி செய்கின்றன.

ஆழ்வார்கள் சேதுவைப் பல இடங்களில் ''அணை'' என்றே கூறுவர்.கற்களால் பெரிய அணை போன்ற அமைப்பினை உயர்த்திக் கடலின் சீற்றத்தினை அடக்கிப் பின் கடந்தும் இருக்கலாம்.

ராமன் சுக்கீவனின் தூணையுடன் மிகப்பெரிய வானரசேனையினைத் திரட்டுகிறான்.வானம் என்பது குரங்கு.நமது மனமே அதுவாகும்.குரங்கு எப்படி சதா ஓரிடத்தில் நிலையாது குதிப்பது போல் மனமும் சதா தறிகிட்டு ஓடிக்கொண்டே இருக்கும்.ராமன் நமது பரமாத்மா.ஜீவனாகிய நம்மை ஆணவமாம் ராவணனிடம் இருந்து விடுவிக்க முயல்கிறது.சுக்ரீவன் குரங்குகளின் தலைவன்.ராமன் தன் மன் எண்ணங்களாகிய குரங்குகளை சுக்ரீவனின் தலைமையில் கூட்டி ஒருங்கிணைப்பதே வானரப்படை ஆகும்.

அலையும் மனமானது குருவின் கட்டுப்பாட்டுக்குள் அடங்கிவிட்டால்,மஹாபலம் கொண்டுவிடும்.அதைச் சுட்டும் அடையாளமாகவே குரங்குகள் மலைகளைத் தூக்கி அணைகட்டிய செயல்பாடாகும்.

அப்போது நாம் செய்யும் சிறு சிறு செயல்களும் பரமாத்ம தத்வத்தினை அறிய உணரவைக்க உதவும் .அச்செயல்களே அணில்கள் ஆகும்.

மலைகளும் பாறைகளும் மிதக்கின்றன என்றால்,அவை பரமாத்ம சம்மந்தம் பெற்றதால் தான்.அதாவது மலைகளும் பாறைகளும் கடலில் மிதக்கும் என்பது சாட்சாத் ''சரணாகதி'' தத்வமே ஆகும்.பாறைகளைத் தான் சுமப்பதாகவும்,அவைக் கடலில் மூழ்காது என்றும் கடலரசன் ராமனிடன் கூறுகிறார்.முதலில் ராமன் அதை நம்புகிறார்.அதனால் தான் குரங்குகளும் நம்பின.

நாம் செஉஉயும் செயல்களே சாதனைகள்.அவற்றினை நாம் முழுமையாக நம்ப வேண்டும்.ஆனால் பற்றுதல் வைக்கக் கூடாது.எனவே ராமன் கட்டிய சேது என்பது பௌதீக ரீதியாகவும் சமய--ஆன்மீக ரீதியாகவும் பல கோணங்களை உடையது.

**என்றும் அழிக்க இயலாத மஹாசேது:**

பட்டபிஷேகம் முடிந்தபின்னர் அயோத்யாவில் சீதையும் ராமனும்சுக வாழ்வு வாழ்ந்தனர்.சீதை கருவுற்றாள்.வண்ணான் ஒருவனின் குடும்பத்தில் எழுந்த சச்சரவினால்,சீதை காட்டுக்கு அனுப்பப் படுகிறாள்.அங்கெ குழந்தைகள் பிறந்தன.தந்தை யார் என்று அறியாத சூழலில் வால்மீகியின் கண்காணிப்பில் வளர்கின்றன.

மனைவியை சங்தேகப் பட்ட ராமன் இலங்கையில் அக்னிபரீட்சை செய்தார்,இன்றோ காட்டிற்கும் அனுப்பி விட்டார்.இவரது இச்செயல்களையே அறியாமையால் இன்றைய மக்களும்,மெண்ணிய வாதிகளும் இஷ்டம் போல் பேசுகின்றனர்,விமர்சனம் செய்கிறனர்.

ராமனும் சீதையும் ஆன்மீக சாதனைகள் மூலம் பரமாத்ம ஐக்கியம் கண்டவர்கள். நீங்கள் எண்ணுவது போல் அவர்கள் உலகின் முன் கணவன்-மனைவி உறவில் உலகதர்மங்களைச் செய்து வந்தனர்.இருவரிடம்,ஒருவருக்கு மேல் ஒருவர் கொண்டுள்ள உண்மையான அன்பு நன்கு தெரியும்.

எதார்த்த நிலையில் பலகாலம் வேறு ஒருவனூரில் இருந்த ஒரு பெண்ணை உங்களில் எத்தனை பேர் அணுவளவு கூட சந்தேகம் இல்லாமல் பார்ப்பீர்கள்.?பஸ்சில் ஒரு நொடி

உங்கள் மனைவியைப் பார்த்த மனிதனை எப்படிக் கையாள்கிறீர்கள்?ராமாயணம் பல காலத்திற்கு முன் பெண் என்பவள் வெறும் போகப்பொருள் என்று மதித்த வேளையில் நிகழ்ந்தது.

சீதையின் அக்னிப்ப்ரீட்சை என்பது உண்மையான அக்னி அல்ல.அக்னிக்கு நிகரான அவளது கற்பினை உலகிற்குக் காட்டும் சாட்சியாகும்.மேலும் மகனை ஒத்த லட்சுமணனை சீதை கேவலமான சொற்களால் சாடுகிறாள்.அந்த லட்சுமணன் பட்ட மனவலி அவளுக்கு ராமனால் உணர்த்தப்பட்டது.

அயோதிக்கு வந்த பின்னும் அவர்கள் வாழ்க்கையில் பிரிவுக்குத் தயாராகத் தான் இருந்தனர்.ஆம்!எப்போது வேண்டுமானாலும் தங்களின் வாழ்க்கை சமுதாயத்தினால் விமர்சிக்கப் படலாம் என்று அவர்களுக்குத் தெரியாதா என்ன?

ராம ராஜ்யம் என்பது அங்கே தான் வருகிறது.அவன் ஒரு போதும் தன்னையும் தன் மக்களையும் பிரித்துப் பார்க்கவில்லை.பொது வாழ்க்கைக்கு வந்த அரசனுக்கு விருப்பு-வெறுப்பு கூதாது.அது மக்களை வழி தவறிநடத்திவிடும்.

தவறு செய்யாத தன் சீதையைப் பறிறி ராமனுக்குத் தெரியும்.அது அவளுக்கும் புரியும்.தங்களால் மக்கள் முறைதவறக் கூடாது என்பதே அவர்களின் தர்மம்.

ராமன் சீதையைக் காட்டிற்கு அனுப்பாவிட்டால் ,நாளை தவறு செய்த பெண்களும் தவற்றை உணரமால் போய்விட்டால் ?

தான்,தன் குடும்பம் ,தன் மனைவி,அவளை மீட்க தான் பட்த பாடுகள் என எதையும் ராமன் தன் இஷ்டம் போல் நினைக்கவில்லை.சுயநலம் இல்லை,அதனால் அவர்கள் வேதனைப்படவில்லை.

அவர்களின் வேதனை,கதறல்,அழுகை எல்லாம் இலக்கிய பாவம்.சீதையை அனுப்பிய ராமன் எப்படி வாழ்ந்தான் என்று உத்தர காண்டத்தினைப் படிக்க வேண்டும்.
அணுவளவும் தன்னலம் அற்ற ராஜதர்மம் அவர்கள் கடைப்பிடித்தது.இன்று நமது அரசியல்வாதிகள் செய்யும் தன்னல அட்டகாசங்கள் எத்தனை எத்தனை?அதுவா ராம ராஜ்யம்?தன்னலம் இல்லாத மக்களின் நலவாழ்வை எண்ணும் அரசனே ராமராஜ்யம் அமைப்பான்.

பிரிவினை ராமனும் சீதையும் ஏற்றனர்.அவர்கள் அப்போதும் தர்மத்தினை விடவில்லை.அவள் ஒருபோதும் குழந்தைகளை ராமனுக்கு எதிராக திசை மாற்றவில்லை.இன்று எத்தனை ஆண்களும் பெண்களும் சுயநலத்திற்காக பிரிந்து வாழ்கையில் குழந்தைகளை திசைதிருப்புகிறார்கள்?அப்பா என்ற வார்த்தையை உறவுகள் சொல்லித் தரும் போது கற்றுத் தரக்கூடாது என்று வாதிட்ட டைவர்சிப் பெண்களும் என் வாழ்வில் கண்டுள்ளேன்.

கற்பு என்பது சதா என்றென்றும் ஒருவரை ஒருவர் எக்காரணம் காட்டிலும் மறவாமல்,எண்ணத்தால் மறக்காமல் வாழ்வதே ஆகும்.நாம் எத்தனை தவறு செய்தாலும் பூமி நம்மை விட்டுவிடாமல் ஆகர்ஷணசக்தியால் காக்கிறது.அதுபோல் தான் கணவனும் மனைவியும் எ'ன்தச்சூழலிலும் ஒருவரைஒருவர் விடாமல் உறவினை வளர்க்க வேண்டும்.அதுவே கற்பியல்.

மார்டன் பெண்களே!சீதையோ,நளாயினையோ,சாவித்ரியோ,கண்ணகியோ,மாதவியோ கற்பியல் வாழ்வில் நழுவாமல் வாழ்ந்ததன் பலன் அவர்களின் கணவர்கள் தங்கள் தவறுகளில் இருந்து மீண்டுவந்தனர்.இதை ஏற்க முதலில் உங்களுள் முன்சொன்ன கட்டுரைகளில் உள்ள ஆன்மீக சாதனைகள் நிகழவேண்டும். ‘‘நான்,எனது’’ என்ற எண்ணமே அகல வேண்டும்.

மக்களே!நம்முள் எத்தனை பேர் கணவனோ மனைவியோ தவறு செய்தும் ,அவர்கலை ஒதுக்கியபின் வேறு துணை நாடாமல் இருக்கிறோம்?ஒரே பெண்ணை மணம் செய்ததால் ராமன் ஏகபத்தினி வ்ரதன் ஆகிவிடவில்லை.உயிருக்கும் மேலான சீதையை மீட்டபின்னும்,அவளுடன் வாழ இயலாமல் போனபின்னும் ,வேறு ஒருத்தியை நாடாமல் வாழ்ந்தானே,அதனால் தான் அவனை தெய்வம் ஆக்கினர் நம் முன்னோர்கள்.

‘‘கல்யாணம் என்பது ஆயிரம் காலத்துப் பயிர்’’ என்பது அதனால் தான்.ஒரு விவசாயி,தன் பயிகள் வளமாக வளர்ந்து பலன் தங்காலும் தராவிட்டாலும் தன் நிலத்தினை நம்பியே வாழ்கிறான்.அதுபோல் தான் தாம்பத்யமும்.

அழகு,பணம் ,வேலை என்று அனைத்திலும் வியாபர வேரம் பேசிக் கல்யாணம் ‘னடக்கும் இக்காலத்து இளைஞர்களுக்கு வழிகாட்டுவதை விட்டுவிடுதல் கூடாது.

மக்களே!கூட்டுக்குடும்பம் அழிந்தது.கதைகள் சொல்லி அன்பையும் ஒழுக்கத்தினையும் போதிக்க தாத்தா--பாட்டி இல்லை.அம்மாவோ பிள்ளை பிறந்து மூன்று மாதத்தில் வேலைக்கு ஓடுகிறாள்.

விஞ்ஞான முன்னேற்றத்தில் டி.வி,நெட்,புத்தகம் என்று பல மீடியாக்கள் வளர்ந்துள்ள காலத்தில்,ராமாயணம்,பரதம் போன்ற பல வாழ்க்கைக்கு வழிகாட்டும் நூல்கள் வெளியாகும் போது அதன் மூலமாவது பிள்ளைகள் நல்லனவற்றைத் தெரிய நாம் உதவவேண்டும்.

மக்களே!முழுமையான நல்லவனும்---தீயவனும் உலகில் இல்லை.யாராரிடம் எந்த நல்லவை உள்ளதோ அவற்றைப் பிள்ளைகளுக்குச் சொல்லித் தருவோம்.

ராமன் கட்டிய சேது அழியினும் கடலுக்குள் இருப்பினும் ஒருபோதும் இ‘ன்தியாவ்ன் குடும்பங்களுள் கற்பும்,தன்னலமில்லா வாழ்வும் அறமும் வழிமாற விடக்கூடாது.

அதுவே உண்மையான சேது பந்தனம் ஆகும்.
அது அழியவே அழியாது!!!

**இன்றும் என்றும் தொடரும் தர்ம பரிபாலனம்:**
பூலோக வைகுண்டமாம் ஸ்ரீரங்கத்தில் தாயாரும் பெருமாளும் ஆண்டுக்கு ஒருமுறைதான் உடலில் ரீதியில் சந்திக்கும் சம்ப்ரதாயம் உள்ளது.ஏன் தெரியுமா?அன்று ஒரு வண்ணாண் மூலம் தர்மபரிபாலனம் செய்யத் தாங்களாகவே ‘‘ பிரிவு’’ என்ற தார்மீகக் கொள்கியினை உண்டாக்கிக் கொண்ட ராமனின் குலதெய்வதம்,இன்று அவனது அவதாரம் முடிந்தும், அவனைப் போல் வாழ்ந்து வருகிறது.பாருங்கள் தெய்வத்தின் சத்தியஸ்வரூபத்தினை.!இதற்கிடையே ஒரு அந்நியப் படையெடுப்பின் போது பெருமாள் வடநாட்டுக்குக் கடத்திச் செல்லப் பட்டார்.பின்னர் எப்படியோ பல உயிர்த்தியாகங்களினால் மீட்கப்பட்டு சுமார் அறுபது ஆண்டுகள் ஸ்ரீரங்கத்திலேயே இல்லாமல் திருமலையில் வாசம்புரிந்துள்ளார்.பின்னர் பெருமாள் ஸ்ரீரங்கம் வந்த போது அவரை அடையாளம் காட்டும் பரம்பரை யாரும் இல்லை.மக்களுக்குள் குழப்பம்.கடைசியின் கண்தெரியாத ஒரு தொன்னூறு வெளஅதிற்கும் மேலான வண்ணான் ஒருவன் ஊருக்குள் வந்த புதிய பெருமாளுக்கும்,அறுபது ஆண்டுகளாய் வழிபட்ட பெருமாளுக்கும் அபிஷேகம் செய்ய வேண்டுகிறான்.அவ்வாறே அபிஷேகம் செய்யப் பட்டு இரண்டு பெருமாள்களின் திருமேனியில் பட்ட தீர்த்தமும் அவனுக்கு ருசிக்கத் தரப்பட்டது.பழைய பெருமாளின் தீர்த்த ருசியால் அவரது உண்மையை அறிந்த அவ்ன் ,‘‘ஆஹா !!!இவரே நம்பெருமாள்........‘‘என்று அடையாளம் காட்டினான்.அப்பெயரால் அன்றோ இன்றும் ஸ்ரீரங்கனின் அழகியமணவாளனாம் உத்சவர் அழைகப்படுகிறார்.

பாருங்கள்,ஒரு வண்ணானின் குடும்பத்தினால் பிரிவுற்ற திவ்யத்தம்பதியினர்,அவன் குலப் பாவத்தினைத் தீர்க்க இந்த யுகத்தில் அவன் குலம் மூலமே சேர்த்தி கண்டுள்ளனர்.

பரமாச்சாரியன் ஸ்ரீராமானுஜர் மூலம் எத்தனையோ மாற்ற--சீர்திருத்தங்களைச் செய்த ஸ்ரீரங்கன்,ஏன் சதா தானும் தாயாரும் அடிக்கடி வேறுசில கோயில்களில் போல் சேர்ந்திருக்கும் சம்ப்ரதாயத்தினை புகுத்தியிருக்கக் கூடாது?அவர்கள் புகுத்தவில்லை.காரணம் அதுவே தர்மத்தினை என்றென்றும் தெய்வம் கடைபிடிப்பதன் சாட்சி ஆகும்.பிரிவு என்பது உடலால் தானே!மனதால்,ஆத்மாவால் ஏது பிரிவு?உடலால் சேர்ந்து வாழும் தம்பதிகள் எத்தனை பேர் உண்மையான இல்லற வாழ்க்கையை மேற்கொள்கிறார்கள்?தயவு செய்து கிடைத்த வாழ்க்கையை வீணாக்காமல்,சண்டைகளில் கழிக்காமல் ஆன்மீக சாதனையை மேற்கொள்ளுங்கள்!தம்பதிகள் ஒருவருக்கு ஒருவர் குரு ஆகின்றனர்.இருவரின் சுயநலம் இல்லாத வாழ்க்கையே  ஆன்மீகப் பெருவாழ்க்கை ஆகும்.

அன்பர்களே!எதுவாயினும் சரி.ஜீவனுக்கும் பரமனுக்கும் உள்ள தொடர்பே சேது பந்தனம்.அதை இறைவனே தகர்க்க இயலாது.எனவே உண்மையான ராம பக்திக்கும், சேதுவுக்கும் ஆபத்து வராமல் ஸ்ரீரங்க திவயத்தம்பதியினர் காப்பாற்றுவர்.

ஜெய் ராம்! சீதா ராம்!!!
நன்றி!!!